
உ
சம்புநாதேஸ்வரர் துணை




அருள்மிகு பஞ்சமுக சுயம்பு நாத சுவாமி திருவுருவம்

ஈழத்தமிழ் நாட்டில், பண்டைய காலத்திலிருந்து, இன்று வரைக்கும், மறைபொருளாக, அழிவின்றி, நிலை நிற்கும்

**"அருள்மிகு சம்புநாத சிவாலயம்"**

இன்றைய காலத்திலிருந்து, நீண்ட எதிர்காலத்திற்கு,

"சன்மார்க்க, சமரச, அறநெறி, அன்பு ஆச்சிரமம்"

என அமையப் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Board of Trustees,
Arulmihu Sampunatha Swamy (Sivan) Temple
Chulipuram North-East,
Saatharvoalai.

**The Preliminary Estimate for the Reconstruction of the Temple.**

Upon inspection, I observed the temple has been profusely damaged and seems beyond repairs. It is not advisable to allow worshippers to move about under the structures as the structures are so dispersely cracked with crevices everywhere which might collapse inadvertently and those crevices might possibly be abode for poisonous creatures too.

This dilapidated-temple -structures should be demolished forthwith and as requested by the devotees, if so to restore their historic and high-famed idolatory, the temple ought to be reconstructed to last incessantly for generations on the basis of modern perspective, and hence the preliminary estimate for proposed reconstruction is about Rupees Five Million Five Hundred and Twenty Thousand

R. Shanmuga Anantha Nadesar
Jehovah's Witness',
Consultant Civil Engineer,
'Gabriel Home',
Vaddu-West,
Vaddukoddai.

*R. Shanmuga Anantha Nadesan.*
CONSULTING ENGINEER
Ex-Deputy Resident Engineer, Saudi ... — 21st Feb, 200[illegible]
Ex-Municipal Engineer Jaffna
"SHRI RANGAM"
Vaddu-West, Vaddukoddai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பதினெண்புராணங்களுளொன்றாகிய காந்தத்திலுல்ள

# தகஷிண கைலாச புராணம்.

இது யாழ்ப்பாணத்து வதிரி வித்துவான் சி. நாகலிங்கபிள்ளையால்
வடமொழியிலிருந்து மொழிபெயர்த்து கத்தியரூபமாக இயற்றி,
கொழும்பு பிரமஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்
விருப்பத்தின்படி விநாயக சுந்தரவிலாச யந்திர சாலையில் அச்சிடப்பட்டது.
வதிரி, யாழ்ப்பாணம்.

## பதினெட்டாவது சுயம்புநாதப் படலம்

### முனிவர்கள் வினாவுதல்

வேதவியாசருக்கு மாணாக்கராய் மகாபாக்கியசாலியாய் சர்வ சாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்தவராய விளங்குஞ் சூதரே! பாயிரத்திலே சுயம்பு சேத்திரம் என்று உம்மாற் கூறப்பட்டதன்றோ? அத்தல விஷேடத்தையும் கேட்க விரும்புகிறோம் என்று நைமிசவன வாசிகள் சூதரை வினாவுதலும். சூதர் சுயம்புநாத கேஷத்திர மகிமையைச் சொல்லத் தொடங்கினர்.

முனிவர்களே! உங்களால் இப்பொழுது அக்கேள்வி நன்கு வினாவப்பட்டது. ஆகையால், கேட்பதால் பாவங்களெல்லாவற்றையும் அழிப்பதாயும், தரிசிப்பதால் மோட்ச சாதனமாயும் விளங்குகிற சுயம்புநாத தலமான்மியம் நம்மால் இங்கே உங்களுக்குச் சொல்லப்படும். நீங்கள் யாவரும் அன்புடன் கேளுங்கள். உத்தமமாகிய நாத கேஷத்திரமானது தட்சணை கைலாசமாகிய திருக்கோணமலைக்கு வடக்கு இராமசேதுவுக்குக் கிழக்கு ஆகிய இந்த எல்லைக்குள் இருக்கின்றது.

### வைரவன் சுயம்புலிங்கத்தைக் கண்டது.

முன்னொரு காலத்தில் வைரவன் என்னும் பெயருள்ள வேளாளன் ஒருவன் மிகவுந் தரித்திரனாயும், வேளாண்மை செய்து சீவனஞ் செய்பவனாயும் இருந்தான். மக்களும் மனைவியும் தானும் தன ஆடு மாடுகள் யாவற்றையும் தனக்குரிய வேளாண்டொழிலாற் பொருளீட்டிப் பாதுகாத்து வந்தான். ஒரு நாள் வைரவன் காட்டை வெட்டித் திருத்தித் தானியங்களை விதைக்க எண்ணி, அதற்கூரிய கோடாலி கத்தி மண்வெட்டி முதலானவைகளைக் கொண்டு காட்டையடைந்து மரங்களையுங் கொடி செடிகளையும் வெட்டி யழித்து நெருப்பு மூட்டி அவைகளையெரித்து அழித்தனன். அப்படி அழித்தபோது ஒரிடத்தில் நடுவில் சிறிதிடம் எரியாமல் சுற்றி நாற்புறமும் எரிந்திருந்தது. அது கண்டு வைரவன் மிகவும் அதிசயங்கொண்டு சுற்றி எரிந்த நடுவே கொஞ்சம் இடம் எரியாமல் இருப்பதற்கு காரணம் யாது என்பதை அறியுங் கருத்துடையவனாய் அந்த இடத்திலே போய்ப் பார்த்துக் கைக்கோடாலியால் ஒரு முறை வெட்டினான் வெட்டியபோது அந்த இடத்திலிருந்து இரத்தம் வெள்ளமாய் பெருகிற்று. அவன் அங்கே கவனித்துபார்க்கவே அவ்விடத்தில் ஒரு சிவலிங்கமிருக்கவுந் தான் வெட்டிய வெட்டு அச்சிவலிங்கத்தின் சிரசிற் பட்டமையினாலே இரத்த வெள்ளம் பெருகிவருதலையுங் கண்டான்.

முனிவர்களே! கேட்பீராக. அவ்வேளான் உடனே அச்சங் கொண்டு இஃது என்ன அதிசயம்! என்று சிந்தித்துப்பின் இந்த விருத்தாந்தத்தைத் தன் சனங்களுக்குப் போய் அறிவித்தான். இவன் சொல்லக்கேட்ட சனங்களெல்லாரும் உடனே அவ்விடத்தை வந தடைந்து சிவலிங்கமிருக்கவும் இரத்தம் பெருகி வடியவுங் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டனர். எங்களை ஈடேற்றும் பொருட்டன்றோ தயாநிதியாகிய சிவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடத்தில் வெளிப்பட்டார், என்று மனத்தில் சந்தோஷப்பட்டு ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். பின் அவர்கள் யாவரும் தங்கள் தங்கள் ஆபரணங்களைக் கழற்றி இவை சிவனுக்குரியவையென்று சிவார்ப்பணஞ் செய்துவிட்டுத் தங்கள் அறிவுக்கேற்றவாறு பலவகையாகத் தோத்திரம் செய்து வலம்வந்து நமஸ்காரம் செய்து "ஓ" அன் பர்களுக்கு அனுக்கிரகம் செய்வதில் விருப்பமுள்ளவரே! அடியோம் அறியாமையினாலே செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்தருள்க என்று மும்முறை கூறிப்பணிந்து விடைபெற்றுக் கொண்டு தங்கள் இருப்பிடஞ்சென்றனர்.

அந்த நாட்டை அரசு செலுத்தி வரும் வன்னிய ராசன் இவ்வதிசய சம்பவத்தைக்கேள்விப்பட்டு மந்திரிக்கு அனுமதி செய்ய மந்திரி போய் இவ்வகளை அறிந்து ஒரு சிவாலயங்கட்டுவிக்க எண்ணிச் சிற்பநூலில் வல்லவர்களாகிய சிற்பிகளைத் தருவித்துச் சிவாகம விதிப்படி கருப்பக்கிரகம் அருத்த மண்டபம் மகாமண்டபம் முதலானவைகளையும் பிரகாரம் கோபுரம் முதலானவைகளையும் பரிவாரதேவர் ஆலயங்களையும் அமைத்து ஆதி சைவப்பிராமணர்களைக்கொண்டு சித்திரை மாதத்தில் சித்திரா பௌர்ணிமையில் சோமவார சுபதினத்தில் நல்ல முகூர்த்தத்தில் பிரதிட்டை செய்து கும்பாபிஷேகம் நடத்தி, நித்திய பூசையும் நைமித்தியபூசையும் முறைப்படி நடத்திவந்தான். எந்நாளும் பூசை திருவிழா நடைபெறும்படி வேண்டிய விளை நிலங்களையுங் கிராமங்களையும் ஏற்படுத்தினான்.

## சுயம்புநாதப் படலம்.

தானே தோன்றிய காரணத்தினால் அந்த லிங்கம் தான்தோன்றியநாதலிங்கமென்று பெயர் பெற்றதெனவுணர்க. வன்னிய பூபதி தான்றோன்றியப்பருக்கு இவ்விதம் ஆலயங்கட்டிக் கும்பாபிடேகஞ் செய்து ஆதிசைவப்பிராமணர்களைக் குடியிருத்தி நித்திய நைமித்திய காமிய பூசைகளைச் சிவாகம விதிப்படி நடத்தி அப்பூசைகளுக்கு வேண்டிய திரவியமும் விளைநிலங்களும் கிராமங்களும் சர்வமானியமாய் விட்டு என்றும் அழியாதபடி செய்து, தானும் புத்திர பௌத்த சந்தானப் பெருக்கத்தோடு சுகமாய் வாழ்ந்தனன்.

முனிவர்களே! அவதானத்துடன் கேளுங்கள்! மேற்கூறிய வைரவனுந் தான்தோன்றிநாதர் மகிமையினால் அஷ்ட ஐசுவரியங்களோடும் புத்திர பௌத்திரார்களோடும் சுகமாய் வாழ்ந்து சிவலோகமெய்தினான்.

## அகத்திய முனிவர் பூசித்தது.

முற்காலத்தில் அகத்தியமுனிவர் இமயமலையரசன் புத்திரியின் திருக்கல்யாணத்தின்போது பரமசிவனது அநுமதிப்படி பொதிய மலைக்குப்போகும் பயணத்தில் திருக்கோணமலையென்னுந் தெட்சிணகைலாசத்தையடைந்து மகாவலி கங்கையில் முழுகி விதிப்படி நித்திய நைமித்திய கன்மங்களை முடித்துக் கைலாசபதியை வணங்கித் துதித்து விடை பெற்றுக் கொண்டு அவ்விடமிருந்து புறப்பட்டு இந்தச் சுயம்புநாத க்ஷேத்திரத்தையடைந்து சுயம்புலிங்கப்பெருமானைப் பூசித்து வணங்கிக்கொண்டு. பின்பு திருக்கேதீஸ்வர தலத்தையடைந்து அங்கே சுவாமி தரிசனஞ் செய்து, பின் பொதியிலை அடைந்தார். ஆதலால் இத்தலத்துக்கொப்பாகிய தலம் உலகத்தில் இல்லை.

இப்படலத்தைப் படிப்பதால் எல்லாப் பேறுகளும் கிடைக்குமென்று சூதர் அருளிச்செய்தார்.

சுயம்புநாதப் படலம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பார்ந்த சைவ தமிழ் பெரும் குடிப்பிறந்த பெரியோர்களே!

இந்த வெளியீட்டு அறிக்கையை நன்கு படித்துவிட்டு, உங்களின் மன எண்ணங்களை, நிறைகுறைகளை, சிரமம் பாராது, சிவாலய பரிபாலன சபையினருக்கு, நேரிலோ, எழுத்து மூலமோ அறியத் தாருங்கள்.

இதனால் ஈழத்தமிழ் மக்களுக்கும் "இறைசக்தி" அருளுக்கும் ஏற்புடையோராவீர்

**வணக்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை சக்தி தத்துவம்

இயற்கையின் ஆக்க தத்துவங்கள் அனைத்தும் ஐந்தின் அடி ஒட்டி அமைந்திருப்பது ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதாகும்.

"இறைசக்தி"; - எங்கும் நிறைந்தது, என்றுமுள்ளது, எல்லாம் வல்லது, எல்லாம் அறிவது. தனக்கென உருவமற்றது.

இறைசக்தி திருவிளையாடல்:- படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மீட்டல் ஆவன.

**அண்ட சராசரங்களையும் படைத்த இறைசக்தி:-**

ஐம்பெரும் பூதங்களுள், . அனைத்தினையும் அடக்கி உள்ளது.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம். பல்கோடி உயிர்வாழ் சொத்துக்களிலெல்லாம் உயர்ந்த பிறவி மானிடப் பிறவியாகும். விசேடமாக அமைந்த பகுத்தறியும் ஆற்றலால் மானிடர் செயலாற்ற அமைந்திருப்பன:-

## ஐம்பொறிகள் + ஐம்புலன்கள்.

இந்த பூவுலகு ஐந்திணைகளாக அமைந்திருப்பன குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன.

தமிழ்பேசும் சைவமக்கள் அனைவரும் "இறைசக்தி" அருள்வேண்டி மனம் திறந்து, வாய்திறந்து பாராயணம் பண்ணுவது "பஞ்சபுராணம்"

"இறைசக்தி" சொரூபத்துக்கு ஒளிகாட்டி ஆராதித்து, எம்மை அந்த ஒளிமேல் கைகூப்பி விளங்க வைப்பது பஞ்சாராத்தி சைவத்தமிழ் மக்கள் பாராயணம் செய்யப் பணிக்கப் பெற்ற தாரக மந்திரம் சிவாயநம/நமசிவாய.

இன்னோரன்ன அனைத்திலும், எம் வாழ்வுக்கு வழிகாட்டி பஞ்சாங்கத்திலும் ஐந்தின் இறை மகிமையைக் காண்க.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தென்னாடுடைய சிவனே போற்றி"
"என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"
இன்பமே சூழ்க!
எல்லோரும் வாழ்க!




**"இறைசக்தி" அருள்வேண்டும் அடியார்களே!**
**கீழ்காணும் அறிக்கையை நன்கு படிப்பீர்களாக!**
**தங்கள் கருத்துக்களை அறியத்தருவீர்களாக!**

**ஈழத் தமிழ்த் திருநாட்டின்** சிரசுபோல் விளங்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டின், வலிகாமம் மேற்கு வட்டத்துள், வட மேற்குச் சமுத்திரக் கரையோரம் அமைந்திருக்கும் நிலப்பரப்பின் பெயர் **'சம்பில்துறை'.** பண்டைய காலந் தொடக்கம் இக்காலம் வரை இப்பெயர் மங்காதிருப்பதை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ்ப் பெருங்குடி மக்களில் அநேகருக்கு இப்பிரதேசம் அறியப்படாததொன்றாகும். அதற்கான காரணம்: இப்பிரதேசம் அமைந்திருக்கும் இடமாகும். பொன்னாலைக் கடற்கரைக்கும், மாதகல் கடற்கரைக்கும் இடைப்பட்ட பகுதியே இப்பிரதேசமாகும். நெடுங்காலமாக இப்பிரதேசம் பற்றைக்காடகவே காட்சி தருகின்றது. பொன்னாலை மக்களும், மாதகல் மக்களும் தேவைநோக்கிப் பிரயாணம் செய்வது பண்ணடத்தரிப்பு வழியாகவும், சுழிபுரம் வழியாகவுமேயாம். சம்பில்துறைப் பிரதேசம் தேவையற்ற பகுதியாகப் போய்விட்டது.

## இருந்தபோதும், நாம் தெரிந்திருக்கவேண்டிய அதற்கான காரணங்களாவன!

2500 ஆண்டுகளுக்கு முன்பு சம்பில்துறை ஒரு பிரதான துறைமுகப்பட்டினமாக ஈழத்தில் விளங்கிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் இத் துறைமுகக் கரைப் பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மக்களுள், செட்டியார் வம்சாவழியினரே முன்னிலை வகுத்தனர். அவர்கள் நல்ல பொருள்தார வளத்தோடு வாழ்ந்துள்ளனர். இங்கு வாழ்ந்த செட்டிப்பெருங்குடி மக்களும், தென்னிந்திய வாணிபச் செட்டி மக்களும், ஒரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் புலனாகின்றது.

பண்டைக்கால வரலாற்றில் தென்னிந்தியாவிலுள்ள செட்டிநாட்டுச் செட்டிமார்கள், காவிரிப்பூம் பட்டினத்தில் பலதேசத்தவர்களுடனும் பண்டமாற்று வாணிபத்தொடர்பு கொண்டு வாழ்ந்தனர். இது சரித்திரம் கூறும் உண்மை. அவர்களின் சந்ததியினரே சம்பில்துறைப் பிரதேசத்திலும் ஆதிக்கம் செலுத்துவோராக இருந்திருக்கின்றனர். இதனைவிட இந்தத் துறைமுகமடங்கிய ஊரின் பெயர் அன்று சோழபுரம் என்றிருந்து, பின்பு திரிபுபட்டுச் சோழியபுரமென மாறி இன்று சுழிபுரமாயிற்று. அன்று சுழிபுரம் எனவிளங்கிய பிரதேசம், இன்று ஆறு கிராமங்களாகப் பிரிந்துள்ளது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கிராம சேவையாளர் உள்ளர். இவைகாலஓட்டத்தின் கோலங்கள்.

அன்றைய சோழபுரத்தின் வடமேற்குக்கரையோரம் 'செட்டிகுறிச்சி' என்ற பெயரால் அழைக்கப்பெற்றது. இன்றும் அப்பெயர் வழக்கிலுள்ளது. இருப்பினும் கடந்த இருபதாம் நூற்றாண்டுடன் இங்குவாழ்ந்த செட்டியார் பெருங்குடி மக்கள் அருகிப்போய் விட்டனர்.

ஒரு குறிப்பிட்ட சமுதாயம், ஒரு தேசத்தை தன் வயம் வைத்திருப்பதும், காலப்போக்கில் அந்த ஆதிக்கம் மறைந்து மாறிவருவதும் இயற்கை நியதியாகும். சோழபுரம், செட்டிகுறிச்சி என்னும் ஊர்பற்றிய இந்தப் பெயர் வரலாற்றைப் பிற பிரதேச மக்கள் அறிந்திருந்தால் மாத்திரமே, பண்டைய வரலாற்றை அறிய விரும்பும் **"இறைசக்தி"** அடியார்கள், ஊர் பற்றிய பண்டைய வரலாற்றை உணர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டியார் வம்சாவழியினர் எந்தெந்த நாடுகளுக்குச்சென்று வாழ்ந்து தமது வாணிபத் தொழிலை மேற்கொண்டார்களோ, அங்கெல்லாம் சைவாலயங்கள் அமைத்து வழிபடத் தவறியதில்லை. உதாரணம்: கொழும்பு செட்டிதெரு, வெள்ளவத்தை சைவக்கோயில்கள் செட்டியார்களின் செயற்பாடாகும்.

சைவசமய பதினெண்புராணங்களுள் ஒன்றாகிய தட்சண கைலாயபுராணத்தில் "சுயம்புநாதர்" படலம் இதனை விரித்துரைக்கின்றது. அருள்மிகு சுயம்புநாதர் சிவாலயம் "சம்பில்துறை" இல் இருந்தது என்பதை, மறைக்கவோ, மறுக்கவோ, மறக்கவோ, முடியாது.

பண்டைக்காலத்தில் வாழ்ந்த மக்களுள் ஆன்மீகப் பசிக்கு ஆகாரம் தேடித் தவம் செய்தோர் பலர் உளர். இவர்கள் மெஞ்ஞானிகளாகவும், முனிபுங்கவர்களாகவும், தபசிரேஷ்டர்களாகவும் விளங்கினர் என்பது, வரலாறு கூறும் உண்மை. பழம் பெருமைவாய்ந்த வடமொழி, தமிழ்மொழி இவற்றில், ஏட்டில் எழுதிவைத்த புராணங்கள், அன்றைய மக்கள் மத்தியிற்காணப் பெற்ற அபரிமிதமான ஆன்மீக நாட்டத்தையே எடுத்துக் கூறுகின்றன.

இன்று மக்கள் மத்தியில் உலகாயதமே மேலோங்கி நிற்கின்றது. இதனாலேதான் போலும், இன்றைய சமூகத்தவர் ஒருவரோடுருவர் பகை கொண்டாடி, முட்டிமோதி, அழிவுப் பாதையிற் செல்வதற்குப் பழக்கப்பட்டு விட்டனர்.

## இனி வரலாற்றுக்கு வருவோம்

இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பு சம்பில்துறை பட்டினமாக மிளிர்ந்தபோது, இங்குவாழ்ந்த வணிகச் செட்டியார்கள், துறைமுகத்தைச் சிறப்பாக வைத்திருந்தார்கள். எனவே இங்கு முன்னரே ஒரு ஆலயம் இருந்திருக்க வேண்டும். சம்பில் துறையில் எழுந்தருளியிருந்த **"சுயம்புநாத ஷேத்திரம்"** இவர்களின் காலத்துக்கு முற்பட்டதென்பதைத் தட்சணகைலாச புராணம் மூலம் நாம் தெளிந்து கொள்ளலாம். செட்டியார் காலத்தில் சுயம்புநாதஷேத்திரத்தின் பெயர்மருவி, சம்புநாதசுவாமி ஆகி விட்டது, வியப்பானதொன்றன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பெயருடனேயே இவ்வாலயம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நின்று நிலவி வருகின்றதும் "இறைசக்தி" திருவிளையாடலேயாம்

சம்பில்துறைப்பட்டினம் அன்று பஞ்ச பூதங்களின் சீற்றத்துக்குள்ளாகி சமுத்திரத்தோடு சங்கமமாகி விட்டதென்பது, வரலாறு தரும் உண்மை நிலையாகும். தென்னிந்தியக் கடற்கரையில் இருந்த காவிரிப்பூம்பட்டினம் அந்நியர் ஆட்சிக்காலத்தில் சமுத்திரத்துடன் சங்கமமானது போல இதுவும் நடைபெற்றிருக்கலாம்.

சிவாலயத்தின் மூலவிக்கிரகமான சிவலிங்க சொரூபம் அக்காலத்தில் செட்டியார்களினால் மீட்கப்பெற்று கடற்கரையை அண்டிய நாவல்காட்டில் எழுந்தருள வைக்கப்பெற்றதாகவும், பிற்காலததில் ஆலயததின் இருப்பிடம், பலநூறு இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டதாகவும் சென்ற இருபதாம் நூற்றாண்டு வரை கல்விச் செல்வத்துடனும் பொருட்செல்வத்துடனும் வாழ்ந்த செட்டியார் வம்சத்தினர் பரம்பரைபரம்பரையாகக் கூறி வந்தனர்.

இக்குறிச்சியில் வாழ்ந்த செட்டிமார் மிக்க சைவப்பற்று உடையவர்கள். ஆசாரசீலர்கள். இறைதொண்டில் இணைந்த பூசகர்கள், கல்விமான்கள், சோதிட வல்லுநர்கள். நிலச்சுவாந்தர்கள். இவர்கள் யாவரும் செல்வச் செருக்கோடு வாழ்ந்தார்கள். இதனைநாம் கண்கூடாகக் கண்டோம். இருபதாம் நூற்றாண்டில் கொழும்பு செட்டியார் தெருவில் **"மெய்கண்டான் பிறெஸ்"** வைத்து நடத்திய கொடை வள்ளல், சி. இரத்தினசபாபதி அவர்கள், சுழிபுரம் செட்டிகுறிச்சியில் வாழ்ந்த சின்னத்துரைச் செட்டியாரின் மகனாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவ்வள்ளல் இரத்தினசபாபதி அவர்கள் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் நல்லைநகர் ஆறுமுக நாவலருக்குச் சிலை வடிக்கும் குழுவுக்குத் தலைமை வகித்து, அவர் உருவச்சிலையை ஊர்வலமாக எடுத்து வந்து, நல்லூர்க்கந்தன் ஆலய வாசலில் மண்டபம் அமைத்துச் சிறப்பித்தார்.**

இவை நிற்க, காவிரிப்பூம்பட்டினம் இன்று கண்கொள்ளாக் காட்சி தரும் இடமாக அமைந்து விட்டது. **(பூம்புகார்)** ஆதிதிராவிடன் பரம்பரையை அழியவிடாது காப்பாற்றப்பிறந்த, அன்று சென்னையில் முதல் அமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள் திட்டம் தீட்டி, பலகோடி ரூபா பணத்தைச் செலவு செய்து பழம் பெருமை குன்றாது ஆக்கி விட்டார்.

ஆனால் ஈழத்தின் சம்பில்துறைப் பிரதேசமோ சனநடமாட்டம் அற்ற, காட்டுப் பிரதேசமாகவே விளங்குகின்றது. ஆனால் பண்டைய வரலாறு கூறும் பாளிமொழி நூலாகிய "மகாவம்சம்" தரும் சரித்திர ஆதாரங்களை மூலதனமாக வைத்து, இன்றைய பௌத்த சிங்களப் பெருமக்கள், தமது மதத்தைப் பிரபலபடையச் செய்வதற்காகச், சம்பில் துறையில் பலகோடி ரூபா செலவு செய்து புத்தவிகாரை அமைத்தும், பாஞ்சாலைகள், பூஞ்சோலைகள், உருவாக்கியும் சிறப்பாகப் பேணி வருகின்றனர்.

## இதன் வரலாற்று உண்மை பின்வருமாறு:-

2300 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய உபகண்டத்தில் பேரரசனாக விளங்கியவன் அசோகச் சக்கரவர்த்தி. யுத்தமுனைகளில் வெற்றி கொள்ள எதிரணிப் படைகளைக் கொன்று குவித்த பரிதாபக் காட்சியைக் கண்ணுற்ற அசோகன், மனம் மிக நொந்து, போதிமர்த்தவனின் போதனைகளால் ஆட்கொள்ளப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவ காருண்ய வேட்கையினால் பீடிக்கப்பட்ட மன்னன் தனது மகளான சங்கமித்திரையை பௌத்த சமயத்தைப் பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பினான். பிக்குணியாகிய சங்கமித்திரையும் பரிவாரங்களும் வெள்ளரசுமரக் கிளைகளுடன் பாய்மரக்கப்பல்கள் மூலம் சமுத்திரத்தைக் கடக்க வேண்டி ஏற்பட்டது. அவ்வாறு அவர்கள் பிரயாணம் செய்து இலங்கைத் தீவை வந்தடைந்த இடம் சம்பில்துறைப் பட்டினமாகும். இவ்வாறு இவர்கள் வந்திறங்கிச் **சங்கமித்திரை** கால்பதித்த இடம் இன்று எப்படி ஆனது என்பதை நன்கு அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டியது இன்றைய தமிழன் ஒவ்வொருவனதும் **தலையாய கடமையாகும்.**

அன்று சம்பில் துறைமுகத்தில் இருந்து வாழ்ந்து வரவேற்று உபசரிதவர்கள் வணிகச் செட்டியார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. வந்த யாத்திரிகர்கள் இங்கு தங்கி இளைப்பாறியபொழுது துறைமுகத்தை அலங்கரித்து எழுந்தருளியிருந்த சம்புநாதசிவாலய தரிசனம் நிச்சயம் செய்திருப்பார். இதிற் சந்தேகத்திற்கிடமில்லை. செட்டியார்களின் வழிநடத்தலின் பேரிலேயே யாத்திரீகர் நடைப்பயணம் அனுராதபுரத்தைச் சென்றடைந்தது. அன்று அங்கு நாட்டப்பெற்ற வெள்ளரசு மரக்கிளையே இன்றும் **புத்தமத தலவிருட்சமாகப்** பேணப்பெற்று வருவதை உலகறியும்.

நிற்க இந்தியாவில் சேரநாட்டை ஆண்ட சேரன் செங்குட்டுவன் காலத்தில், கற்புக்கரசியாம் கண்ணகிக்கு ஆலயம் அமைக்கப்பெற்று, கண்ணகி அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பெற்று கும்பாபிஷேகமும் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சேரமன்னனுக்கும் திறை செலுத்துபவனாக முதலாம் கஜபாகு(கி.பி.113 – 135) என்ற சிங்களச் சிற்றரசன் இலங்கையில் ஆட்சி செய்தான். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா எடுத்தபோது பல தேசத்து அரசர்களுக்கும் அழைப்பு விடுத்தான்.

அந்த விழாவில் கஜபாகுமன்னனும் தன் பரிவாரங்களுடன் சென்று பங்குபற்றினான். கசபாகு மன்னனும் பரிவாரங்களும் கடல் கடந்து பிரயாணம் செய்த துறைமுகம் **"சம்பில்துறை"** கஜபாகு மன்னனும் பரிவாரங்களும் சேரநாட்டிலிருந்து திரும்பிய பொழுது, கண்ணகி அம்மன் கற் சிலைகளையும் எடுத்து வந்து சம்பில்துறையை அடைந்தனர். அன்று அவ்விடமிருந்த செட்டியார்களின் உபசரிப்பை ஏற்று இளைப்பாறிச் சென்றபோது, செட்டியார்களிடம் ஒரு கண்ணகி கற்சிலையையும் அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

சம்பில்துறைச் சம்புநாதரைப் பூசித்து வந்த செட்டியார்களே, இந்தக் கண்ணகி அம்மன் சிலைக்கும் கோவில் கட்டிப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடாத்தினர். அன்றிலிருந்து 2000 ஆம் ஆண்டு முடியும்வரையும் பரம்பரை பரம்பரையாகக் ஆண்வழி உரித்துடையோர் இச் சொத்துடைமையைப் பேணிப் பாதுகாத்து வந்தனர்.

இ.்து இவ்வாறிருக்க, அருள்மிகு சம்புநாத சுவாமி சிவாலயம் ஐம்பெரும்பூதங்களின் இயற்கையான சீற்றத்துக்குள்ளாகி சமுத்திரத்துடன் சங்கமமாகி அழிந்துபோக, சிவலிங்க சொரூபம் மாத்திரம் பல்வேறு இடங்களில் பல்வேறு தடவைகள் மாறிமாறி வைக்கப்பெற்றது. இதனை, 20 ஆம் நூற்றாண்டில் வாழ்நத நமது மூதாதையர் கர்ணபரம்பரைக் கதையாகக் கூறக் கேட்டிருக்கின்றோம். கண்ணகிக்கு அமைக்கப் பெற்ற ஆலயமும் →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே மாறிமாறி வந்தது. இறுதியில் சுழிபுரம் வடகிழக்கில் 19ம் நூற்றாண்டில் செட்டி குறிச்சியில் தாபிதம் செய்யப்பெற்ற கோவிலே இன்று நாம் காண்பதாகும்.

பண்டைக்காலத்தில் சோழபுரத்தில் அரசோச்சிய செட்டியார் வம்சாவழியினர் இரண்டாயிரமாம் ஆண்டு முடிவுடன், குடிபெயர்ந்து பிற இடங்களுக்குச் சென்று விட்டனர். இந்நிலையில் பழம்பெரும் இரு சைவ ஆலயங்களையும் 2500 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்வழிச் சொத்துரிமைக்காரராகி வந்த கடைசி உரிமைக்காரர் செய்வதறியாது, மனம்விரும்பி, அயற்கிராமங்களில் வாழ்கின்ற வழிபடுவோரை அணுகி, இவ்விரு ஆலயங்களையும் இவற்றுக்கு உரித்தான அசைவுள்ள, அசைவற்ற சொத்துக்களையும் ஏற்கும்படி விண்ணப்பித்தனர்.

11.07.1999 இல் சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலையில் வழிபடுவோர் மகாசபை கூட்டம் கூடி நன்கு விவாதித்த பின்பு தீர்மானமாக்கி, இரு ஆலயங்களினதும் அறுதிஉறுதி முடித்து பதினொரு பேர் கொண்ட பரந்து பட்ட சமுதாய பரிபாலன சபையிடம் கைமாற்றம் பெற்றிருக்கின்றது.

சீரற்றிருந்த அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயம் புனரமைக்கப் பெற்று வழிபாடு செய்வோரின் நன்கொடையா (ரூபா 8,00 000) எட்டு லட்சத்துக்கு மேல் பெற்று அத்தியாவசியமானவற்றை நிறைவேற்றி 15.04.2000 ஆம்ஆண்டில் கும்பாபிஷேகம் நிறைவு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 ஆம் ஆண்டு தைமாதத்தில் அருள்மிகு **சம்புநாதேஸ்வரர்** ஆலய புனர்நிருமாண அலுவல்கள் ஆரம்பமாகின. பழைய கோவிற் கட்டிடங்களை முற்றாக அகற்றிப் புதிதாக கட்ட வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பெற்றிருந்தோம். அதற்கான விளக்க அறிக்கையை ஆங்கிலத்தில் தந்தவர், கட்டிடக்கலையில் உயர் பட்டம் பெற்ற, சிறந்த அனுபவம்மிக்க, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொண்ட உயர்திரு.R.சண்முகானந்த நடேசன் ஆவார்.

21.02.2001 இல் தரப்பெற்ற கட்டிடப் புனருநிர்மாண உத்தேசச் செலவு தொகை ரூபா 50,20,000 ஆகும். இன்று 2004இல் மூலப் பொருட்களின் விலையேற்றம், வேலையாட்களின் சம்பள உயர்வு இருமடங்காகி விட்டது. பரிபாலன சபையினர் நான்கு ஆண்டுகளாக மேற்கொண்ட பகீரதப் பிரயத்தனத்தினால் இன்று வரைக்கும் மூன்றில் ஒரு பங்கு வேலைகளையே நிறைவேற்ற முடிந்தது.

## என்னே பரிதாபம்!....!

சுயம்புநாத படலத்தில் பண்டைய முனிவர்களாற் கண்டறியப் பெற்ற பிரகாரம் **2005 ஆம் ஆண்டு** சித்திரை மாதத்தில் சித்திரா பௌர்ணமியில் கும்பாபிஷேகம் நிறைவேற்ற வேண்டுமென்ற பெருவிருப்புடன் செயலாற்றுகின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

நம்நாட்டிலேற்பட்ட போராட்டம் எம் சம்புநாதேஸ்வரரையும் விட்டு வைக்கவில்லை. யாம் செய்த கர்ம வினையாலோ என்னவோ எமது சம்புநாதேஸ்வரர் ஆலயம் குண்டுவீச்சுக்கு உட்பட்டுத் தரைமட்டமாகியது. தரை மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை திரும்பக் கட்டுவதற்கும் நாலாபுறமும் நின்று பக்தர் ஒரே நேரத்தில் பூசை வழிபாடுகளைக் காண்பதற்கும் செய்வதற்கும் வசதியாகப் பஞ்சமுக சிவலிங்கம் அமைத்து எண்திசையிலும் அருள் வெள்ளம் துலங்க தற்போது இவ்வாலயத்தைக் கையேற்றுள்ள பரிபாலன சபை அல்லும் பகலும் முயற்சி எடுத்து வருகின்றது. இம்முயற்சி திருவினையாகவும், செயற்பாடுகள் யாவும் நல்நிலை பெறவும் சம்புநாதேஸ்வரர் யாவரது உள்ளத்திலும் உட்புகுந்து அருள்பாலிக்க பிரார்த்திக்கின்றோம். அத்தோடு தமிழ் மக்களும், சிங்கள அரசர்களும் ஒருமித்து நின்று வணங்கிய இத்திருத்தலத்தில் சகோதரத்துவம், சமத்துவம் சன்மார்க்க சமரச வாழ்வு மீண்டும் உருவாக எம் குல தெய்வமான பறாளாயுறை பன்னிரு கையனைச் சித்திக்கின்றோம். வந்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:

# ஆணித்தர ஆதாரங்கள் வருமாறு

1. திருமலை திருக்கோணேஸ்வர தஷ்ண காண்டத்தில் கூறப்பட்ட வடக்கெல்லையில் அமைந்தது இவ்வாலயமாகும்.

2. சூதமுனிவருடைய கூற்றுப்படிக்கு இவ்வாலயம் சேதுக்கரையின் கிழக்கே அமைந்திருக்கின்றது. இதற்கு ஆதாரம் 1945ம் ஆண்டுக்கு முன்பு நாம் சம்பில்துறையிலிருந்து மேற்கு நோக்கி கடல் மார்க்கமாகப் பயணித்துச் சேருமிடம் சேதுக்கரையாகும்.

3. சூதமுனிவர் செப்பிய சுயம்பு நாதேஸ்வரமே செட்டிமார்களின் ஆதிக்க காலத்தில் சம்புநாதேஸ்வரம் என மருவியது.

4. வன்னியரசன் அவர்களால் வாரி வழங்கிய மான்ய நிலபுலங்கள் காலத்திற்குக் காலம் கைமாற்றம் பெற்றுள்ளன என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

5. செட்டியார்களின் மூத்த ஆண்வழிப் பரம்பரை உரிமைச் சொத்தாகவும் தன்னாதிக்கம் உள்ளதாகவும் இருந்ததால் உலகில் இவ்வாலயம் பிரசித்தி பெற்றுத் திகழவில்லை.

6. பண்டைய காலத்தில் மிகச் சிறப்புற்றுத் திகழ்ந்த இவ்வாலயம் எதிர்காலத்தில் மிகச்சிறப்புற்று விளங்கும் என்பது கண்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைசக்தி அடியார்களே!

இந்த வரலாற்றுப் பெருமைமிக்க சிவாலயத்தை நிறைவேற்ற எம்சந்ததியினர் முன்வர வேண்டும். அழியவிடுவோமாயின், சைவத் தமிழினத்தை அழித்தொழிப்பதற்கு இடம் கொடுத்தவர்கள் ஆகிவிடுவோம்.

மேலும் நிறைவேற்ற வேண்டிய அத்தியாவசிய கருமங்கள் நிறைய இருக்கின்றது. நன்கொடை வழங்குவோர் நேரிற் பரிபாலன சபையாரிடம் கொடுத்துப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். பணம் அனுப்ப விரும்புவோர்

**சங்கானை மக்கள் வங்கிக்கு**
**அருள்மிகு சம்புநாதேஸ்வரர் சிவாலயம்**
என்ற முகவரிக்கு


**சேமிப்புக்கணக்கெண்: 1080314**
அல்லது
**நடைமுறைக் கணக்கு: 25186**
க்கு அனுப்பி வைத்தும் பரிபாலன சபைக்குக் கடிதமும் அனுப்பினால் உடன் முறைப்படி பற்றுச் சீட்டு அனுப்பி வைக்கப்பெறும்.

**இங்ஙனம்**
**பரிபாலனசபையினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு சம்புநாதேஸ்வரர் சிவாலயம்




(சோழர்புரம்) சுழிபுரம் வட கிழக்கு
யாழ் மாவட்டம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org